# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மண்டலம்**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு. K. சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ.,**

**ந.க.எண். 1973/16 செம3** **நாள் : 18.05.17**

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரசங்கால் ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண்கள். 292/8B2, 9A2B, 9B2B-ல் 4898.28 சமீ மனைப்பரப்பளவில் பிளாக் I மற்றும் 2-ல் ஸ்டில்ட் + 4 தளங்களில் 112 குடியிருப்புகள் கொண்ட கட்டிட வரைபடங்களுக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டதில் தற்போது சிறிய மாற்றங்களுடன் கூடுதலாக 8 குடியிருப்புகளுடன் ஆக மொத்தம் 120 குடியிருப்புகளாக உயர்த்தி திருத்திய கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ), சென்னை அவர்கள் செயல்முறை கடிதம் ந.க.எண். 12593/2016/பிஏ2 நாள் : 26.12.16
2. மனுதாரர் M/s. Steps Stone Promoters (P) Ltd. கடிதம் நாள் : 06.07.16, 12.7.16, 07.09.16 (ம) 16.11.16
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் செயல்முறை கடிதம் ந.க.எண். 12483/2015/பிஏ2 நாள் : 12.10.15
4. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு செயல்முறை கடிதம் எண். 1444/2015 நாள் : 4.11.2015
5. அரசாணை எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 28.03.12
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/09/பிஏ2, நாள் : 16.04.2009
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/09/பிஏ1, நாள் : 04.4.2012
8. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள் : 12.01.17
9. மனுதாரர் M/s. Steps Stone Promoters (P) Ltd. கடிதம் நாள் : 06.02.17 (கூடுதல் உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிக் கட்டணம், (ம) நன்னிலை வரி செலுத்தப்பட்டது)
10. மனுதாரர் M/s. Steps Stone Promoters (P) Ltd. கடிதம் நாள் : 09.05.17 (OSR ஒப்படைக்கப்பட்ட விபரம்)

---

**உத்தரவு :**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரசங்கால் ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண்கள். 292/8B2, 9A2B, 9B2B-ல் 4898.28 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு பார்வை(3)ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயலாணை கடிதத்தில் 'ABCD' என எல்லையிடப்பட்டு மனைஒப்புதலும், அம்மனையில் ஸ்டில்ட்+4 தளங்களில் பிளாக் I மற்றும் 2ல் 112 குடியிருப்புகள் கொண்ட கட்டிட வரைபடங்களுக்கு **க.வ./ந.ஊ.து.இ.(செம) எண். 184/2015 (5 தாள்கள்)** என

எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை(4)ல் கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயலாணையில் **ம.வ./நஊதுஇ(செம) எண். 142/15** என எண்ணிட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் 8637.86 சமீ பரப்பளவில் அமைந்துள்ள 112 குடியிருப்புகள் கொண்ட கட்டிட வரைபடங்களுக்கு **க.வ./ந.ஊ.து.இ.(செம3) எண். 55('அ' முதல் 'உ' வரை)/2015** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பார்வை(1)ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ) அவர்களின் செயலாணையில் மேற்படி மனையிடத்தில் சிறிய மாற்றங்களுடன் கீழ்கண்ட கட்டிட பரப்புகளுடன் கூடுதலாக 8 குடியிருப்புகளுடன் ஆக மொத்தம் 120 குடியிருப்புகளாக உயர்த்தி உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்திய வரைபடங்களுக்கு **க.வ./ந.ஊ.இ.எண். 212/2016** என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கீழ்கண்டவாறு கூடுதலாக உத்தேசித்துள்ள குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு **ம.வ./ந.ஊ.து.இ(செம) எண்.08 ('அ' முதல் 'இ' வரை)/2017** (3 தாள்கள்) என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

மனையிடப் பரப்பு = 4898.28 சமீ

பிளாக் 1 மற்றும் 2 ஸ்டில்ட் தளம் மொத்தம் Non FSI Area = 605.60 சமீ

வாட்ச்மேன் ரூம் = 6.36 சமீ

| பிளாக் மற்றும் தளங்களின் விபரம் | FSI Area சமீ-ல் | Non FSI Area சமீ-ல் | குடியிருப்புகள் விபரம் |
|---|---|---|---|
| **Block – 1 :** | | | |
| முதல் தளம் | 1151.51 | 67.26 | 16 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 1151.51 | 67.26 | 16 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 1151.51 | 67.26 | 16 குடியிருப்புகள் |
| நான்காம் தளம் | 1132.72 | 17.56 | 16 குடியிருப்புகள் |
| மொத்தம் | 4587.25 | 219.34 | 64 குடியிருப்புகள் |
| **Block – 2 :** | | | |
| முதல் தளம் | 1060.26 | 44.32 | 14 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 1060.26 | 44.32 | 14 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 1060.26 | 44.32 | 14 குடியிருப்புகள் |
| நான்காம் தளம் | 1050.26 | 5.57 | 14 குடியிருப்புகள் |
| மொத்தம் | 4230.98 | 138.53 | 56 குடியிருப்புகள் |
| ஆக மொத்தம் (Block –1 மற்றும் Block – 2) | **8818.23** | **357.87** | 120 குடியிருப்புகள் |

FSI Area = 8818.23 சமீ

OSR Area = 493.82 சமீ

OSR பரப்பு 493.82 சமீ இடம் திருத்தல் தானப்பத்திர எண். 810/17 (Rectification deed) நாள் : 23.12.17 மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை(5)ல் கண்ட அரசாணையின்படி கூடுதல் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணம் (ம) நன்னிலை வரி ஆகியன அரசுக்கு செலுத்தக் கோரி, பார்வை(8)ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டு, பார்வை(9)ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கூடுதல் I & A கட்டணம் ரூ.75,000/- (ம) நன்னிலை வரி ரூ. **2,000/-** ஆகியன பெறப்பட்டுள்ளது.

**<u>சிறப்பு நிபந்தனைகள் :</u>**

1. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
2. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
4. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
7. The Provisions in the G.O. (Ms) No. 17, H & UD (UD4(3)), Department, dated : 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

நிபந்தனைகள் :-

1. உத்தேச பிளாக் 1 மற்றும் 2-ல் 120 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U"Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், கரசங்கால் ஊராட்சி/குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் இறுதி உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், கரசங்கால் ஊராட்சி/குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

இணைப்பு : ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் - 2 தொகுப்புகள்
(2 x 3 = 6)

பெறுநர் : தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
கரசங்கால் ஊராட்சி/குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் : M/s. Steps Stone Promoters (P) Ltd.,
No. 1/1, Sakthi Nagar, 2nd Street,
Choolaimedu,
Chennai – 94.

# கரசங்கால் ஊராட்சி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை:- திரு.பா.மணிமாறன்**

**ந.க.எண்.61/2017-2018** **நாள்.06.09.2017**

பொருள் : வரைபட அனுமதி குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் கரசங்கால் ஊராட்சி - சர்வே எண்கள்.292-8B2,9A2B,9B2B ல் 4843.50 ச மீ பரப்பளவில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட பிளாக் 1 & 2 ல் ஸ்டில்ட் + 4 தளங்களில் 112 குடியிருப்பு கட்டிட வரைபடத்தில் தற்போது சிறிய மாற்றங்களுடன் 120 குடியிருப்புகளாக உயர்த்தி திருத்திய கட்டிட வரைபடங்களுக்கு திரு.M/s Step stone Promotors Pvt Ltd. நிறுவனத்திற்கு அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது

பார்வை : 1.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) அவர்களின் ந.க.எண்.1973/16/செம3 நாள்.12.05.2017

2.இவ்வலுவலக ந.க.எண்.061/2017/ஆ1 நாள்.23.20.2017

3.மனுதாரர் திரு.M/s Step stone Promotors Pvt Ltd துரைமேடு சென்னை அவர்களின் நாள்.04.08.2017

4.தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (விதி எண்.21)1994 மற்றும் கட்டிட விதிகள் 1997

5.அரசாணை எண்.255 ஊரக வளர்ச்சித்துறை (C2) நாள்.18.08.1997

*******

ஆணை :-

பார்வை 1 ல் கண்ட நகர் ஊரமைப்பு உத்திரவின்படி குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த கரசங்கால் ஊராட்சி திரு.M/s Step stone Promotors Pvt Ltd. நிறுவனத்தின் சர்வே எண்கள்.292/8B2,9A2B,9B2B ல் 4843.50 ச மீ மனைப்பரப்பளவில் பிளாக் 1 & 2 ல் ஸ்டில்ட் + 4 தளங்களில் 112 குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டதில் தற்போது சிறிய மாற்றங்களுடன் கூடுதலாக 8 குடியிருப்புகளுடன் 120 குடியிருப்புகளாக உயர்த்தி திருத்திய கட்டிட வரைபடங்களுக்கு ம.வ/ந.ஊ.து.இ (செம).எண்.08/2017 ன் படி **M/s Step stone Promotors Pvt Ltd** கரசங்கால் என்ற நிறுவனத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து இறுதி உத்திரவு வழங்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1.உத்தேச பிளாக் 1 மற்றும் 2 ல் 120 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Healing System அமைக்கப்பட வேண்டும்.

2.வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3.மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4.தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5.மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 11.10.2002 ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6.உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7.மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8.உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9.அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.03.11.2004 ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10.சுற்றுச்சுழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11.அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12.இவ்வாணை அளிக்கப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு செல்லத்தக்கது.

13.உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act) ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
(இ) படப்பை

பெறுநர்
**M/s Step stone Promotors Pvt Ltd,**
**No.1/1 Shakthi Nagar, 2 nd Street,**
**Choolaimedu Ch-94**

நகல் :- நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate